# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 28 வெள்ளிக்கிழமை 13.12.2024 கதிர் 79









# முடிவேதுமில்லாமல் முடிந்து போன ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் !

**யாழ்ப்பாணம், டிச. 13**

**நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் பின்னர் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இன்று இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், பெரும் சல சலப்புகளின் பின்னர் முடிவேதும் இல்லாமல் முடிந்து போனதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

6 ➤

## அர்ச்சுனா கேட்டதில் தவறு என்ன? அதிகாரிகள் பற்றி மக்கள் பேச்சு

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இன்று காலை இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது நாடாளுமன்ற உறுப் பினர் மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா கேள்வி எழுப்பிய விதம், அவர் நடந்து கொண்ட முறை தவறாக இருந்தாலும், அவர் கேட்ட விடயங்களில் தவறென்ன இருக்கிறது என்று பொது மக்கள் சார்பில் வினா எழுப்பப்பட்டுள்ளது.

இன்றைய கூட்டம் தொடர்பில் மாலைக்கதிருக்குக் கருத்துத் தெரிவித்த பொதுமகன் ஒருவர், அதிகாரிகள் தம் பக்கம் பிழ இல்லை என்றால் அவருக்கெதிராக ஏன் கொதிக்க வேண்டும்? ஜனநாயக முறையில் அவர் கேட்கும் கேள்விகளுக்கு உரிய பதிலைச் சொல்லலாமே? தேவையற்ற விதத்தில் அவரது குரலை அடக்க முனைவதும், அவரைக் கூட்டத்தில் இருந்து வெளியேற்ற முனைவதும் ஜனநாயகமாகாது என்று குறிப்பிட்டார். (ஜ-05)

## இன்றைய கூட்டம் நடத்தியது அமைச்சரா? அர்ச்சுனாவா?

யாழ்ப்பாணம், டிச. 13

இன்று இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தியது, அதன் தலைவரும், அமைச்சருமான ஆர். சந்திரசேகரா அல்லது நாடாளுமன்ற உறுப்பினர், மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனாவா என்று தங்களுக்கு விளங்கவில்லை என்று பொது மக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இன்றைய கூட்டம் தொடர்பில் எழு மாற்றாகத் தகவலறிந்த மாலைக்கதிருக்குக் கருத்துத் தெரிவித்த பொதுமகன் ஒருவர், கூட்டம் ஆரம்பமாகிய நேரம் முதல் எவடிராருவரையும் கதைக்க விடாமல் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கருத்துத் தெரிவித்துக் கொண்டிருந்தமையும், அதிகாரிகளைக் கேவலப்படுத்தும் வகையில் அவர் நடந்து கொண்ட போது, தலைமைக் கதிரையில் இருந்தவர் அவற்றைப் பார்த்து வாளாவிருந்ததும் தங்களுக்கு விளங்கவில்லை என்று குறிப்பிட்டார். (ஜ-05)

## அமைச்சர்களின் தகுதியை ஆராயக்குழு!

(கொழும்பு, டிச. 13)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் பதவி வகிக்கும் அமைச்சர்களின் கல்வித் தகுதி குறித்து ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைப்பதற்கான கோரிக்கையை முன்வைத்து நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்று முன்வைக்கப் படவுள்ளதாகத்

6 ➤

## பிந்திய செய்தி:

# சபாநாயகர் பதவி துறப்பு!



( கொழும்பு, டிச. 13)

பத்தாவது நாடாளுமன்றத்தின் சபாநாயகர் அசோக சப்புமல் ரன்வல தனது பதவியை இராஜி னாமா செய்துள்ளார்.

நாடாளுமன்ற இணையத்தளத்தில் சபாநாயகரின் பெயருக்கு முன்னால் “கலாநிதி” எனக்குறிப்பிடப்பட்டிருந்தமை தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சைகளை அடுத்தே தான் தனது பதவியைத் துறப்பதாக சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் குறிப்பொன்றை வெளியிட்டுள்ள அவர், தான் பொய்யான கூற்றுக்கள் எதனையும்

(முன்னர் வந்த செய்தி மேலே...)

6 ➤

## வர்த்தமானி வெளியீடு!

(கொழும்பு, டிச. 13)

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமான அறிவித்தல் வெளிவந்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக் குழுவினால் வெளியிடப் பட்டுள்ள அதிவிஷே வர்த்தமாணி அறிவித்தலின் படி, சுஜீவ சேனசிங்க, மொஹமட் நிஸாம் காரியப்பர், முஹம்மது இஸ்மாயில்

6 ➤

# தவறு செய்பவர்களை அரசு பாதுகாக்காது ஊடகத் தலைவர்களிடம் ஜனாதிபதி உறுதி!

(கொழும்பு, டிச. 13)

“தவறு செய்யும் எவரையும, எக்காரணம் கொண்டும் பாதுகாக்க எமது அரசாங்கம் தயாரில்லை. நாட்டில் மட்டுமல்ல, எமது அரசாங்கத்திலும் எவரேனும் எந்த மட்டத்திலும் தவறு செய்தாலும், அந்தத் தவறுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டோம்” என்று குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, “தரமான மற்றும் நிலையான நாடு உருவாகும் என்ற நம்பிக்கையுடன் இந் நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தை உருவாக்கினர். அந்த தனித்துவமான நம்பிக்கைக்கு தீங்கு விளைவிக்க எங்கள் அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது” என்றும் தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊடகங்களின் தலைமை அலுவலர்களுடன் இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

“ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக, இந்நாட்டு மக்கள் வெவ்வேறு அரசாங்கங்களை உருவாக்கியுள்ளனர். வெவ்வேறு அரசாங்கங்களை கவித்துள்ளனர். வரலாற்றில் முதன்முறையாக, இந்நாட்டு மக்கள் எமக்கும் - தேசிய மக்கள் சக்திக்கும் இரண்டு சந்தர்ப்பங்களில் வழங்கிய வரலாற்று ஆணையின் பொருள் மற்றும் சாரம்சம் பற்றிய விரிவான விளக்கத்தை இம்முறை நாங்கள் பெற்றுள்ளோம்.

தரமான மற்றும் நிலையான நாடு உருவாகும் என்ற நம்பிக்கையுடன் இந் நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தை உருவாக்கினர். அந்த தனித்துவமான நம்பிக்கைக்கு தீங்கு விளைவிக்க எங்கள் அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது. சுருக்கமாக கூற வேண்டும் என்றால், நாட்டில் தவறு செய்யும் எவரையும் எக்காரணம் கொண்டும் பாதுகாக்க எமது அரசாங்கம் தயாரில்லை. நாட்டில் மட்டுமல்ல, எமது அரசாங்கத்திலும் எவரேனும் எந்த மட்டத்திலும் தவறு செய்தால் அந்தத் தவறுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டோம்.

சரியான நேரத்தில் இது தொடர்பாக சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க நாங்கள் தயங்க மாட்டோம். ஏழு தசாப்தங்களாக ஏமாற்றப்பட்ட மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்தி இந்த நாட்டை சிறந்த நாடாக மாற்றுவதற்கு தமது அரசாங்கம் நிபந்தனையற்ற அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது” என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ, அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹர்ஷ பண்டார மற்றும் அரச ஊடகங்களின் தலைமை அதிகாரிகள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

(ஜ-03)

## நீதி அமைச்சருக்குக் கலாநிதிப் பட்டம் நாடாளுமன்றத்தின் பதிவேற்றத் தவறு!

### - சட்டவாக்கல் பணிப்பாளர் வருத்தம் தெரிவிப்பு -



கொழும்பு, டிச.13

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் “கலாநிதி” எனக் குறிப்பிட்டு நாடாளுமன்ற இணையத் தளத்தில் வெளியாகிய தகவல், தரவு உள்ளீட்டினால் ஏற்பட்ட குழப்பமாகும். இது அமைச்சரின் தவறு இல்லை என்று இலங்கை நாடாளுமன்றத்தின் சட்டவாக்கல் சேவைகள் பிரிவின் பணிப்பாளர் எம். ஜெயலத் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற இணையத் தளத்துக்குத் தரவுப் பதிவேற்றம் செய்யும் போது ஏற்பட்ட தவறுக்காக நீதி அமைச்சருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய அசௌகரியங்களுக்காகத் தான் வருத்தம் தெரிவிப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்துள்ள சுயவிவரச் சமர்ப்பணத்தின் எந்தவொரு இடத்திலும், தனது கலாநிதிப் பட்டம் பற்றிக் குறிப்பிடவில்லை. தரவு உள்ளீட்டில் ஏற்பட்ட தவறைச் சரி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடடார்.

(ஐ)

## சஜித் மீது திஸ்ஸ அதிருப்தி!



(கொழும்பு, டிச. 13)

நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாகச் செயற்படும் ஐக்கிய மக்கள் சக்தி விரைவில் மறுசீரமைக்கப்பட வேண்டும். அவ்வாறு அல்லாவிட்டால் தற்போதைய பலமான அரசுடன் அரசியல் ரீதியில் மோதுவதென்பது பெரும் சவாலாகவே அமையும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி என்பன மறுசீரமைக்கப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கை விரைவில் இடம்பெறவேண்டும். இதனை வலியுறுத்தும் வகையிலேயே கடந்த தேர்தல் முடிவுகள் அமைந்தன. எனவே, மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மாற்றம் இடம்பெறவேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைய வேண்டும் எனக் கூறப்படுகின்றது. அவ்வாறு நடக்க வேண்டும் என நானும் வலியுறுத்துகின்றேன்.

புதிய மாற்றமொன்றை நாம் மக்களுக்கு காட்டியாக வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தற்போதுள்ள அரசுடன் அரசியல் சமரில் வெல்வது சவாலாக அமையும். அதேவேளை, ஐக்கிய மக்கள் கூட்டணி உடைவதை நாம் விரும்பவில்லை. அதனால்தான் கலந்துரையாடல் மூலம் தேசியப்பட்டியல் பிரச்சினையைத் தீர்த்தோம் என தெரிவித்துள்ளார். (ஐ)

### கொழும்பு துறைமுக நகர

## பொருளாதார ஆணைக்குழுவுக்கு புதிதாக உறுப்பினர்கள் நியமனம்



கொழும்பு, டிச. 13

கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நியமித்துள்ளார்.

புதிய உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்கள் இன்று வெள்ளிக்கழமை காலை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் வழங்கப்பட்டன.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ஷ அமரசேகர நியமிக்கப்பட்டுள்ளார். டெமியன் அமல் கப்ரால், மொஹான் ரே அபேவர்தன, சஞ்சய குலதுங்க மற்றும் கலாநிதி ஹர்ஷ சுபசிங்க ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ஜ-05)

# தென்னிலங்கையில் கோர விபத்து

கொழும்பு , டிச. 13

தெற்கு அதிவேக வீதியின் பின்னதுவ பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த இரண்டு பெண் பிள்ளைகள் உயிரிழந்துள்ளதுடன் அவர்களது பெற்றோரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படுகாயமடைந்த தாய் மற்றும் தந்தையின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் 100 கிலோமீற்றர் தொலைவில், கொட்டாவையில் இருந்து பாலட்டுவ நோக்கி சென்ற காரின் சாரதிக்கு ஏற்பட்ட தூக்கம் காரணமாக அதே திசையில் பயணித்த லொறியின் பின்பகுதியில் மோதியுள்ளது.

விபத்தில் காரில் பயணித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த தாய், தந்தை மற்றும் மகள்கள் இருவர் படுகாயமடைந்து கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாத்தறை சுஜாதா மகளிர் பாடசாலையில் 08ஆம் தரத்தில் கல்வி கற்கும் உபேசிங்க ஆராச்சிகே சதீஷா என்ற 12 வயது சிறுமி மற்றும் அதே பாடசாலையில் 05ஆம் தரத்தில் கல்வி கற்கும் உபேசிங்க ஆராச்சிகே செனுதி என்ற 10 வயது சிறுமியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

மூத்த மகளுக்கு ஏற்பட்ட சுகயீனம் காரணமாக நாரஹேன்பிட்டியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வேளையிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்த சிறுமிகளின் தந்தை வர்த்தகர் மற்றும் தாய் உதானி ராஜபக்ஷ மாத்தறை புனித தோமஸ் குமார வித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியை ஆவார்.

சடலங்கள் கராப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பிரமிட் வடிவிலான அரிய வகை நீல இரத்தினக்கல் கண்டுபிடிப்பு



நீர்கொழும்பு , டிச. 13

நீர்கொழும்பு பகுதியில் உள்ள வர்த்தகர் ஒருவர் பிரமிட் வடிவில் வெட்டப்படாத அரிய வகையான நீலக்கல்லை கண்டுபிடித்துள்ளார்.

இந்த இரத்தின கல்லின் மதிப்பு இன்னமும் உறுதி செய்யப்படவில்லை.

17.42 கரட் எடை கொண்ட இரத்தினக்கல் பதுளை பசறை பிரதேசத்தில் உள்ள சுரங்கத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழும் இந்த இரத்தினக்கல்லிற்கு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உலக சந்தையுடன் இணை வதற்கும் அந்நியச் செலாவணியை ஈட்டு வதற்கும் இலங்கைக்கு இந்த இரத்தினக்கல் ஒரு சிறந்த வாய்ப்பை ஏற்படுத்தும் என அதன் உரிமையாளர் தெரிவித்தார்.

குறித்த உரிமையாளர் சுமார் 20 வருடங்களாக இரத்தினக்கல் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் வர்த்தகர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# போதியளவு எரிபொருள் கையிருப்பில்



கொழும்பு , டிச. 13

நாட்டில் போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக இலங்கை பெட்ரோலிய வளக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரையில் பயன்படுத்தக் கூடிய எரிபொருட்கள் கையிருப்பில் உள்ளதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜானக ராஜகருணா தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட எரிபொருள் கப்பல் ஒன்று திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட எரிபொருள் கப்பல் பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமானது அல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார். இதனால் எரிபொருள் தட்டுப்பாடு குறித்து மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவிற்கு சொந்தமான யுனைடட் பெட்ரோலியம் நிறுவனத்தினால் கடந்த 2ஆம் திகதி தருவிக் கப்பட்ட எரிபொருள் கப்பல் இவ்வாறு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பலில் தலா 15000 மெற்றிக்தொன் எடையுடைய பெட்ரோல் மற்றும் டீசல் கொண்டு வரப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் உள்ளகப் பிரச்சினை காரணமாக எரிபொருள் கப்பல் தரையிறக் கப்படாது திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதாக ஜனக ராஜகருணா தெரிவித்துள்ளார். (ஐ)

# அதானி நிறுவன திட்டத்திற்கு அநுர ஆதரவு

கொழும்பு , டிச. 13

இந்தியாவின் அதானி நிறுவனம் இலங்கையின் கொழும்பு துறைமுகத்தில் தனது செயற்பாடுகளை ஆரம்பிப்பது மிகவும் முக்கியமானது என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்தை அவதானிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பதாகவும் துறைமுக அதிகார சபைக்கும் பங்கு கிடைக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பு துறைமுகத்தை தனியார் மயமாக்கும் திட்டம் எதுவும் இல்லை, ஆனால் தனியார்துறையுடன் இணைந்து துறைமுக அபிவிருத்திக்காக செயற்படுவோம் என அமைச்சர் கூறியுள்ளார். (ஐ)

# புலமைப்பரிசில் விண்ணப்பங்கள் தொடர்பில் விசேட அறிவிப்பு

கொழும்பு , டிச. 13

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வழங்கப்படும் ரதவிரு சிறுவர் புலமைப்பரிசில் பெறுவதற்கான விண்ணப்பங்களுக்கான விண்ணப்ப இறுதி திகதி டிசம்பர் மாதம் 31ஆம் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த புலமைப்பரிசில் விண்ணப்பத்தை www.slbfe.lk என்ற இணையத்தளத்திற்கு சென்று பதிவிறக்கம் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது தொடர்பான மேலதிக விபரங்களை 0112 365 471 என்ற இலக்கத்திற்கு அழைப்பதன் மூலமோ அல்லது பணியகத்தின் இணையத்தளமான றறற.எடிகந.டம ஐப் பார்வையிடுவதன் மூலமோ பெற்றுக்கொள்ள முடியும் என கூறப்பட்டுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையின் பெற்றோரின் பிள்ளைகளுக்கு மட்டுமே இந்த புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது. இதன் படி உதவித்தொகை மூன்று பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகிறது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு 25,000 ரூபாவும், பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற குழந்தைகளுக்கு 30,000ரூபாவும் , உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகங்கள் அல்லது பிற பாடநெறிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்குத் தகுதி பெற்ற பிள்ளைகளுக்கு 40,000 ரூபாவும் வழங்கப்படுகிறது. (ஐ)

# தனியார் வகுப்புக்கள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்

*யாழ்ப்பாணம் , டிச. 13*

*யாழ்ப்பாண மாவட்டத்தில் தனியார் கல்வி நிறுவனங்களில் தரம் 9இற்குக் கீழான வகுப்புக்களை பிரதி வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நிறுத்துமாறு கல்வி நிறுவன நிர்வாகிகளிடம் மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் கோரியுள்ளார்.*

*யாழ்ப்பாணம் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலர் தலைமையில் நேற்று புதன்கிழமை மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.*

*இந்தக் கூட்டத்தில் மாவட்ட செயலரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு அறிவுறுத்தல்கள் உரிய தரப்புகளுக்கு வழங்கப்பட்டன.*

*1. பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி மாலை வேளையில் பயணிக்கும் யாழ்ப்பாணம் – உசன் வரையான இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து சேவையை கெற்பேலி வரையில் நீடிப்பு செய்யுமாறு இலங்கை போக்குவரத்துச் சபையினருக்கு யாழ். மாவட்ட செயலர் அறிவுறுத்தினார்.*

*2. மாணவர்களின் பாடசாலை இடைவிலகல் மற்றும் மீளிணைப்பு செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து அது தொடர்பாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு மாவட்ட செயலர் அறிவுறுத்தல் வழங்கினார்.*

*3. முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், தனியார் கல்வி நிறுவனங்கள் தரம் 9 இற்குக் கீழ்ப்பட்ட வகுப்புகளை வெள்ளிக்கிழமைகளில் மாலை நேரத்திலும் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுமையாகவும் மாணவர்களின் இணைபாடவிதானச் செயற்பாடுகளுக்காகக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதை நிறுத்த தனியார் கல்வி நிறுவனங்கள் ஒத்துழைப்பு நல்குமாறு மாவட்ட செயலர் கேட்டுக்கொண்டதுடன், இது தொடர்பில் பிரதேச செயலாளர்களை உரிய கல்வி நிறுவனங்களுக்கு தெளிவுபடுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.*



*மேலும், போதைப்பொருள் பாவனை மற்றும் மாவட்ட ரீதியாக கிடைக்கப்பெற்ற 21 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் தொடர்பாகவும் அதற்காக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.*

*இந்தக் கலந்துரையாடலில், உதவி மாவட்ட செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.*

*(ஐ)*

# உணவின்றி பரிதவிக்கும் 400 பயணிகள் கைவிட்டதா இண்டிகோ விமான நிறுவனம்?




துருக்கியில் இருந்து டெல்லி மற்றும் மும்பை பயணிக்கவிருந்த சுமார் 400 இண்டிகோ பயணிகள் இஸ்தான்புல் விமான நிலையில் சிக்கித் தவித்து வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

முதலில் விமானம் தாமதமாவதாக அறிவிக்கப்பட்ட நிலையில், திடீரென இரத்து செய்யப்பட்டு விட்டது என பயணிகள் தங்களின் எக்ஸ் மற்றும் லின்க்டுஇன் தளங்களில் பதிவிட்டுள்ளனர். விமான பயணிகளில் ஒருவர் தனது பதிவில், “முதலில் விமானம் இரண்டு முறை தாமதமானது, இருப்பினும் பின்னர் இரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. எனினும், 12 மணி நேரம் கடந்து மீண்டும் விமானம் புறப்பட தயாராகும் என்று அறிவிக்கப்பட்டது.

இதனால் விமான நிலையத்தில் சிக்கித்தவிக்கும் விமான பயணிகளில் சிலருக்கு உடல் உபாதைகள் ஏற்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து பயணிகளுக்கு தங்கும் வசதி, உணவு எதுவும் வழங்கப்படவில்லை எனவும் இண்டிகோ நிறுவனம் சார்பில் எவரும் விமான நிலையம் வரவும் இல்லை எனவும் மேலும் பயணிகளை அணுகவும் இல்லை என்று அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

முன்னதாக ஏர்ஹெல்ப் ஸ்கோர் வெளியிட்ட அறிக்கையின் படி உலகின் மோசமான விமான நிறுவனங்கள் பட்டியலில் இண்டிகோவும் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

## டெல்லி சட்டசபை தேர்தல்:

# வேட்பாளர் பட்டியலை அறிவித்தது காங்கிரஸ்



தலைநகர் டெல்லியில் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சட்டசபை தேர்தல் நடைபெறவிருக்கின்றது . தேர்தலுக்கான திகதி எப்போது வேண்டுமானாலும் அறிவிக்கப்படலாம்.

மூன்றாவது முறையாக ஆட்சியைப் பிடிக்க ஆம் ஆத்மி கட்சி தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் தற்போது அதற்கான பணிகளை தொடங்கிவிட்டார்.

மொத்தமுள்ள 70 தொகுகளில் 31 தொகுதிகளுக்கு ஏற்கனவே வேட்பாளர்களை அறிவித்துவிட்ட நிலையில் டெல்லி தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றால், 18 வயது நிரம்பிய அனைத்து பெண்களுக்கும் ஒவ்வொரு மாதமும் தலா 2,100 ஷரூபாய் வழங்கப்படும் என தெரிவித்தார்.

டெல்லி சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி இல்லை என ஆம் ஆத்மி தெரிவித்துள்ளது.

இந்நிலையில், காங்கிரஸ் கட்சி தனது முதல் கட்ட வேட்பாளர் பட்டியலை நேற்று வெளியிட்டது. இதில் முன்னாள் எம்பியான சந்தீப் தீக்ஷித் மற்றும் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் புதுடெல்லி தொகுதியில் போட்டியிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டுக் கூட்டங்களில் எனது முகத்தை மறைக்க முயன்றேன்: மந்திரி நிதின் கட்கரி!



பாராளுமன்றத்தின் மக்களவையில் சாலை விபத்துகள் தொடர்பான குறித்த விவாதம் நடைபெற்றது. இதன்போது கேட்கப்பட்ட கேள்விக்கு சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை மந்திரி நிதின் கட்கரி கூறியதாவது:

விபத்துகளின் எண்ணிக்கையை குறைப்பது என்பதை மறக்கவேண்டும். விபத்துகளின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது என்பதை ஒப்புக்கொள்வதில் தயக்கம் இல்லை. சாலை விபத்துகள் தொடர்பான மாநாடுகளில் பங்கேற்கச் செல்லும்போது என் முகத்தை மறைக்க முயன்றேன்.

2014 ல் முதன்முறை பதவியேற்ற போது சாலை விபத்துகளை 50 சதவீதம் குறைக்க வேண்டும் என இலக்கு நிர்ணயித்தேன். ஆனால், நிலைமை இன்னும் மோசமாகி உள்ளது.

போதுமான உட்கட்டமைப்பு இல்லாதது, சாலை விதிகளைப் பின்பற்றாதது உள்ளிட்டவை காரணமாக சாலை விபத்துக்களுக்கு காரணமாகிவிடுகின்றன.

இந்தியாவில் மனித நடத்தைகள் மேம்படுவதற்கு பல விடயங்கள் மாற வேண்டும். சமூகம் மாற வேண்டும். சட்டத்தின் ஆட்சி மதிக்கப்பட வேண்டும்.

சாலை ஓரங்களில் லொறிகள் முறையற்ற வகையில் நிறுத்தப்படுகின்றன. பல சாரதிகள் விதிகளை மதிப்பது கிடையாது.

பேருந்துகள் கட்டுமானத்தில் சர்வதேச பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என உத்தரவிட்டுள்ளோம். அவசர காலங்களில் ஜன்னலை உடைத்து வெளியேற சுத்தியல் வைக்கப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

சில ஆண்டுக்கு முன் எனது குடும்பமும் விபத்தில் சிக்கியது. கடவுளின் கருணையால் நானும் எனது குடும்பமும் தப்பினோம். இந்த அனுபவம்தான் சாலை பாதுகாப்பை மேம்படுத்த வேண்டும் என்ற உறுதியை ஏற்படுத்தியது என தெரிவித்தார்.

இந்தியாவில் ஆண்டுதோறும் விபத்துகளில் சுமார் 1.78 லட்சம் பேர் உயிரிழந்து வருகின்றனர். அதில் 60 சதவீதம் பேர் 18 முதல் 34 வயதுக்கு உட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# டெல்லியில் வெடிகுண்டு மிரட்டல்

# 3 பள்ளிகளுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை




டெல்லியில் உள்ள மூன்று பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதை அடுத்து பாடசாலைகளில் சோதனை நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்த டிசம்பர் 9 ஆம் தேதியில் இருந்து கிட்டத்தட்ட 44 பள்ளிகளுக்கு இதேபோல் மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட சோதனையில் அவை வெறும் வதந்திகள் என தெரியவந்தது.

இன்றைய வெடிகுண்டு மிரட்டல் குறித்து பேசிய தீயணைப்புத் துறை அதிகாரி, “பசிம் விகாரில் உள்ள பட்நகர் சர்வதேச பாடசாலை , ஸ்ரீனிவாஸ் பூரியில் உள்ள கேம்பிரிட்ஸ் பாடசாலை மற்றும் டிபிஎஸ் அமர் காலனியில் உள்ள பாடசாலைகளுக்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது,” என தெரிவித்தார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு துறையினர், பொலிஸார் மற்றும் வெடிகுண்டு கண்டறியும் குழுவினர் மோப்ப நாய்களின் உதவியுடன் பாடசாலைகளுக்கு சோதனை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க வரலாற்றில் இதுவே முதல் முறை.. கைதிகளுக்கு கருணை வழங்கிய பைடன்!

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அடுத்த மாதம் பதவி விலக உள்ள நிலையில், ஒரே நாளில் சுமார் 1500 பேரின் தண்டனைகளை குறைத்துள்ளார். 19 பேருக்கு பொது மன்னிப்பு வழங்கியிருக்கிறார். இது தொடர்பாக வெள்ளை மாளிகை இன்று அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் கொரோனா பரவல் அதிகரித்தபோது வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த சுமார் 1,500 தண்டனை கைதிகளின் தண்டனை குறைக்கப்படுகிறது, வன்முறையற்ற குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட 39 நபர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படுகிறது.

இதன்மூலம் அமெரிக்க வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் ஒரே நாளில் அதிக நபர்களுக்கு கருணை காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தண்டனை கைதிகள் திருந்திவாழ இரண்டாவது வாய்ப்புகளை வழங்க முடியும்.

செய்த தவறுகளுக்கு வருத்தம் தெரிவித்து, சமூகத்தில் மீண்டும் ஒன்றிணைவதற்காக விருப்பம் தெரிவித்தவர்களுக்கு மன்னிப்புகளும் தண்டனைக் குறைப்புகளும் வழங்கப்படுவதாக ஜனாதிபதி ஜோ பைடன் குறிப்பிட்டுள்ளார்.

பைடனின்கருணைநடவடிக்கையை மனித உரிமைக் குழுக்கள், ஜன நாயகக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் குடும்பத்தினர் வெகுவாக பாராட்டியுள்ளனர். நீதி அமைப்பில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்வதற்கான குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக இது பார்க்கப்படுகிறது.



# நெடுஞ்சாலையில் சென்ற கார்கள் மீது மோதி இரண்டாக முறிந்த விமானம்!



அமெரிக்காவில் விமானம் நெடுஞ்சாலையில் மோதி இரண்டாக முறிந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த புதன்கிழமை அன்று தெற்கு டெக்சாஸின் விக்டோரியாவில் உள்ள ஸ்டேட் ஹைவே லூப் சாலையில் பிற்பகல் 3 மணியளவில் இரட்டை எஞ்சின் ப்ரொப்பல்லர் விமானம் ஒன்று கார்கள் மீது மோதியது.

சாலைக்கு மேல் தாழ்வாக பறந்துகொண்டிருந்த விமானம் திடீரென சாலையில் செல்லும் 3 கார்கள் மீது மோதி கீழே விழுந்து இரண்டாக முறிந்தது. குறித்த விபத்தில் 4 பேர் படுகாயம் அடைந்ததோடு ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த விபத்து தொடர்பாக விக்டோரியா பகுதி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். விபத்துக்குள்ளான விமானம் இரட்டை எஞ்சின் பைபர் பிஏ -31 ரகத்தை சேர்ந்தது.

விபத்து நடந்தபோது விமானி மட்டுமே விமானத்தில் இருந்துள்ளார். விபத்தில் அவர் உயிர் தப்பிய நிலையில் அவரிடம் விசாரணை நடத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். இதற்கிடையே விபத்து தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க வரலாற்றில் இதுவே முதல் முறை..

கைதிகளுக்கு கருணை வழங்கிய பைடன்!

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அடுத்த மாதம் பதவி விலக உள்ள நிலையில், ஒரே நாளில் சுமார் 1500 பேரின் தண்டனைகளை குறைத்துள்ளார். 19 பேருக்கு பொது மன்னிப்பு வழங்கியிருக்கிறார். இது தொடர்பாக வெள்ளை மாளிகை இன்று அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் கொரோனா பரவல் அதிகரித்தபோது வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த சுமார் 1,500 தண்டனை கைதிகளின் தண்டனை குறைக்கப்படுகிறது, வன்முறையற்ற குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட 39 நபர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படுகிறது.

இதன்மூலம் அமெரிக்க வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் ஒரே நாளில் அதிக நபர்களுக்கு கருணை காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தண்டனை கைதிகள் திருந்தி வாழ இரண்டாவது வாய்ப்புகளை வழங்க முடியும்.

செய்த தவறுகளுக்கு வருத்தம் தெரிவித்து, சமூகத்தில் மீண்டும் ஒன்றிணைவதற்காக விருப்பம் தெரிவித்தவர்களுக்கு மன்னிப்புகளும் தண்டனைக் குறைப்புகளும் வழங்கப்படுவதாக ஜனாதிபதி ஜோ பைடன் குறிப்பிட்டுள்ளார்.

பைடனின் கருணை நடவடிக்கையை மனித உரிமைக் குழுக்கள், ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் குடும்பத்தினர் வெகுவாக பாராட்டியுள்ளனர். நீதி அமைப்பில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்வதற்கான குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக இது பார்க்கப்படுகிறது..

# பாக்கிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீது ஊழல் வழக்கு!



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷாரா பிபி மீது புதிய ஊழல் குற்றச்சாட்டின் கீழ் பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

பாகிஸ்தான் பிரதமராக இம்ரான் கான் இருந்த போது, உலக நாடுகளின் தலைவர்கள் கொடுத்த பரிசு பொருட்களை அரசு கருவூலத்தில் ஒப்படைக்காமல், தனிப்பட்ட முறையில் முறைகேடாக விற்றது உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் உள்ளன.

அரசு கருவூலத்திற்கு வரும் பரிசுப் பொருட்களை தோஷகானா துறை பேணி காத்து வரும் நிலையில், இந்த முறைகேட்டில் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷாரா பீபி ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இஸ்லமாபாத் கோர்ட்டில் நடந்து வந்த இந்த வழக்கில், இருவருக்கும் தலா 14 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

ஆனால், இந்த தண்டனையை எதிர்த்து தொடரப்பட்ட மேல்முறையீட்டில், தண்டனையை நிறுத்தி வைத்து கோர்ட் உத்தரவித்தது. அதேவேளையில், அரசு ரகசியங்களை கசிய விட்ட வழக்கிலும் இம்ரான் கானுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், அரசு கருவூலத்தில் இருந்த விலை உயர்ந்த ஆபரணத்தை குறைந்த விலைக்கு வாங்கியதாக இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷாரா பீபி மீது புதிய முறைகேடு வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. குறித்த வழக்கிற்காக சிறையில் இருந்த இருந்த இம்ரான் கானும், ஜாமினில் இருக்கும் புஷாரா பிபியும் கோர்ட்டில் ஆஜராகினர். அப்போது, இருவரும் தங்கள் மீதான குற்றச்சாட்டுக்கு மறுப்பு தெரிவித்தனர். அதேவேளையில், இந்த வழக்கில் எதிர்வரும் டிசம்பர் 18ம் திகதி சாட்சியங்களை பதிவு செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



# கார்ப்பரேட்டுகளுக்கான வரி குறைப்பு டிரம்பின் அதிரடி அறிவிப்பு!

'கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான வரி, 21 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக குறைக்கப்படும்' என்று அமெரிக்க அதிபராக தேர்வு செய்யப்பட்டுள்ள டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற குடியரசு கட்சியின் வேட்பாளர் டிரம்ப், எதிர்வரும் ஜனவரி 20ம் தேதி அதிபராக பொறுப்பேற்க இருக்கிறார். இவரது ஆட்சி கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சாதகமாக இருக்கும் என்பது அனைவரும் அறிந்ததே.


இந்நிலையில் , பதவியேற்புக்கு முன்பாக கார்ப்பரேட்களுக்கு நல்ல செய்தியை டிரம்ப் வெளியிட்டுள்ளார். அதாவது, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான வரியை 21 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக குறைக்க முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது மற்ற நாடுகளில் இல்லாத வகையில் கார்ப்பரேட்களுக்கு சலுகை வழங்க முடிவு செய்துள்ளோம். உங்களுக்கான வரி சதவீதத்தை குறைக்க முடிவு செய்துள்ளோம். உத்தேசமாக 42 அல்லது 44ஆக இருந்த வரி 21 சதவீதமாக குறைக்கப்பட்டது. தற்போது, யாரும் நம்ப முடியாத வகையில், அதனை 15 சதவீதமாக குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதுவும் உங்களின் தயாரிப்புகளை அமெரிக்க மண்ணில் மேற்கொண்டால் மட்டுமே இந்த சலுகையை பெற முடியும்.

மீண்டும் அமெரிக்காவில் தொழில் தொடங்க வருபவர்களுக்கு சலுகைகள் வழங்குவோம். யாரிடமும் இல்லாத எண்ணெய் மற்றும் கேஸ் நம்மிடம் உள்ளது. என்னுடைய முதல் பதவி காலத்திலேயே முதலிடத்திற்கு கொண்டு வந்தேன். மீண்டும் முதலிடத்திற்கு செல்லப் போகிறோம். உற்பத்தியைப் பொறுத்தவரை, நாங்கள் முதலிடத்தில் இருக்கப் போகிறோம்.

இது எல்லாம் நடக்கும் போது விலைவாசி குறையும். விரைவில் குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருட்களை மக்கள் வாங்கலாம், எனக் கூறினார.

# தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் குதிப்பு







கொழும்பு , டிச. 13

தமது அடிப்படை வசதிகளை விரைவாக ஏற்படுத்தி தருமாறு கோரியும் இட நெருக்கடிக்கு தீர்வு காணுமாறும் வலியுறுத்தி அம்பாறை மாவட்டம் ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

குறித்த போராட்டம் நேற்று இரவு 7.30 மணியளவில் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் தீப்பந்தம் ஏந்தியவாறு தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்றலில் தீப்பந்தம் ஏந்தியவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுமார் 300 மாணவர்கள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, தமது அடிப்படை வசதிகளை விரைவாக ஏற்படுத்தி தருமாறு கோரி தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழக ஒலுவில் வளாக பிரதான வீதிக்கு அருகில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு பின்னர் வளாகத்தினுள் ஊர்வலமாக தீப்பந்தம் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் போலித் தீர்வுகள் வேண்டாம், விடுதி வசதிகளை விரிவுபடுத்து, தென் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் பல்கலைக்கழகத்தினுள் உடனடியாக அழைக்கவும், மாணவர்களை துன்புறுத்தாதே, மணவர்கள் மீதான அடக்கமுறை நிறுத்து, போன்ற வாசகங்களை ஏந்திய வண்ணம் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

## முடிவேதுமில்லாமல் முடிந்து போன ..........







(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்காவின் நேரடி நியமனத்தில் தலைவராகப் பதவியமர்த்தப்பட்ட கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் கூட்டத்தை முறையாக வழநடத்தத் தவறியதனால் இந்த நிலை ஏற்பட்டதாகக் கூட்டத்தில் கலந்து கொண்ட அரசாங்க அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் இன்று காலை யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இன்று காலை இடம்பெற்றது. ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், கடற்றொழில் நீரியல் வள அமைச்சருமான ஆர். சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. இதன் போது வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச திணைக்களங்களின் தலைவர்கள், பொலீஸ், இராணுவ அதிகாரிகள், அரச அலுவலர்கள் உட்படப் பலர் சமூகமளித்திருந்தனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் இருந்தே யாழ். மாவட்டத்தில் பொது மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் பற்றி மாறி, மாறிக் கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர், மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா திணைக்களத் தலைவர்கள் பலரிடமும் தேவையற்ற விதத்தில் உரையாடியமை அதிகாரிகள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியிருந்தது.

அதிகாரிகள், அரசியல்வாதிகள் என எவரையும் விடாமல் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கூட்டத்தைத் தவறான வழியில் கொண்டு சென்ற போதிலும், கூட்டத்தைத் தலைமை தாங்கிய கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் அவரைக் கட்டுப்படுத்தாமல், அவருக்கு வக்காலத்து வாங்கும் வகையில் நடந்து கொண்டமை மனவருத்தமளித்ததாகக் குறிப்பிட்ட அரச உயர் அதிகாரி ஒருவர், முன்னைய காலங்களில் கூட்டத்துக்குத் தலைமை தாங்கியவர்களோ, தலைமைப் பீடத்தில் அமர்ந்திருந்த ஆளுநரோ இவ்வாறு சபையைக் கூட்டம் நடத்த விட்டு விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததில்லை என்று வருத்தத்துடன் தெரிவித்தார். (ஐ)

## நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திட்ட ஐமச உறுப்பினர்கள்

கொழும்பு, டிச. 13

ஐக்கிய மக்கள் சக்தியினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள, சபாநாயகர் அசோக சப்புமல் ரன்வலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பங்களைத் திரட்டும் பணியை ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பித்துள்ளது.

பத்தாவது நாடாளுமன்றத்தின் சபாநாயர் அசோக சப்புமல் ரன்வல தன்னுடைய கல்வித் தகமை தொடர்பில் நாட்டு மக்களையும், அரசாங்கத்தையும் தவறாக வழிநடத்தியுள்ளார் என்றும்,

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போதும், நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னரும் தான் கலாநிதிதிப் பட்டம் வைத்திருக்கும் ஒருவர் என்று காட்டியுள்ளார் என்றும் குற்றஞ்சாட்டியுள்ள ஐக்கிய மக்கள் சக்தி,

பொது மக்களிடையே இது தொடர்பில் கடும் சர்ச்சை எழுந்த பின்னர் கூட இது பற்றித் தெளிவுபடுத்த அவர் தவறியுள்ளார்.



இதன் மூலம் நடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையினை மீறி இருக்கிறார். அதனால் உயரிய சபை மீதான நம்பிக்கை கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, எதிர்க்கட்சி பிரதம கொறடா கயந்த கருணாதிலக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜே.சி அலவத்துவல, அஜித் பீ பெரேரா, சுஜித் சஞ்சய பெரேரா, சத்துர கலப்பத்தி, ஜகத் விதான மற்றும் ஹர்ஷன ராஜகருணா ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். (ஐ-09)

## அமைச்சர்களின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

இத்தகையதொரு பிரேரணையைச் சமர்ப்பிக்க ஐக்கிய தேசியக் கட்சியும் புதிய ஜனநாயக முன்னணியும் தீர்மானித்துள்ளன என்றும் இந்தப் பிரேரணையை நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் முன்வைக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## சபாநாயகர் பதவி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைக்கவில்லையென்றாலும், சில ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் தற்போது தனது கல்விப் பதிவேடுகளை உறுதிப்படுத்த முடியவில்லை எனத் தெளிவுபடுத்தியுள்ளார்.

"நான் கலாநிதி பட்டத்தைப் பெற்ற ஜப்பானின் வசேடா பல்கலைக்கழகத்துடன் இணைந்த ஆராய்ச்சி நிறுவனங்களின் கல்வி ஆவணங்களை சமர்ப்பிக்க விரும்புகிறேன்," என்று அவர் கூறினார்.

எவ்வாறாயினும், தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ள பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்த விரும்பவில்லை என்பதால் தான் பதவி விலகுவதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தனது கல்வித் தகைமை தொடர்பாக சபாநாயகர் உரிய முறையில் விளக்கமளிக்கத் தவறினால், அவர் தானாகப் பதவி விலக வேண்டும் என வலியுறுத்திய எதிர்க்கட்சிகள், எதிர்வரும் 17 நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வில் சமர்ப்பிப்பதற்கான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றில் கையொப்பம் சேகரிக்கத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கதாகும் (ஐ)

(முன்னர் வந்த செய்தி 6 ஆம் பக்கத்தில்)

## வர்த்தமானி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முத்து முஹம்மது, மனோ கணேசன் ஆகியோரின் பெயர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.12.2024 இல் வெளியிடப்பெற்றது.